## பயறு சாகுபடி குறித்து வம்பனில் இன்று பயிற்சி

First Published : 27 Mar 2012 01:55:09 PM IST

புதுக்கோட்டை, மார்ச் 26: புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயறு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு செவ்வாய்க்கிழமை (மார்ச் 27) பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பயறு வகைப் பயிர்களில் பல்வேறு வகையான களைகள் ஆரம்ப காலம் முதல் வளர்ச்சியுறுவதால், மகசூல் பாதிக்கப்படுகிறது. இதைத் தவிர்க்க, பயிர்களுக்கு தேவையான ஊட்டச் சத்துகளை உரிய தருணத்தில் அளிப்பது அவசியமாகிறது.

இதுதொடர்பான தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில், புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதில் பயறு வகைப் பயிர்களில் ஒருங்கிணைந்த களை மற்றும் உர நிர்வாகம் குறித்துப் பயிற்சி அளிக்கப்படும். எனவே, மாவட்டத்திலுள்ள பயறு சாகுபடியாளர்கள் மற்றும் விவசாயிகள் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு, 04322- 290321 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் 29-க்கு ஒத்திவைப்பு

First Published : 27 Mar 2012 03:11:45 PM IST

திருவள்ளூர், மார்ச் 26: திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் 29-ம் தேதிக்கு (வியாழக்கிழமை) ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என ஆட்சியர் ஆசிஷ் சாட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

நிர்வாக காரணங்களால் இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டம் வரும் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், கூட்டத்தில் பங்கேற்று தங்கள் குறைகளையும், கோரிக்கைகளையும் தெரிவித்து பயனடையலாம் என்று ஆட்சியர் கூறியுள்ளார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

### பேரீட்சை மகரந்த சேர்க்கை எப்படி?

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2012,00:00 IST

பேரீட்சை நடவு செய்த இரண்டரை ஆண்டுகளில் அல்லது மூன்றாவது ஆண்டு தொடக்கத்தில் பூ எடுக்கும். பேரீட்சையில் ஆண் மரம் ஜனவரி மாதம் தொடங்கி பிப்ரவரி வரை பூக்கும். பெண் மரம் பிப்ரவரி இறுதியிலிருந்து ஏப்ரல் வரை பூக்கும். இந்தக் காலநிலை மாறுபாட்டால் இயற்கையாக மகரந்தசேர்க்கை நடைபெறுவதில் சிக்கல்கள் ஏற்படும். இது மகசூலைப் பாதிக்கும். அதனால் ஆண் பூக்கள் பூக்கும்போது, பாளை வெடித்தவுடன் பூவை வெட்டி அதிலுள்ள மஞ்சள்நிற மகரந்தத் தூளை உதிர்த்து ஒரு பாட்டிலில் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். இது நமது அறை வெப்பநிலையில் நான்கு மாதம் வரை கெடாமல் இருக்கும். குளிர் சாதனப் பெட்டியில் உள்ள பிரீசரில் வைத்தால் ஒரு வருடம் வரை கெடாமல் இருக்கும்.
பெண் மரங்களில் பாளை வெடித்ததிலிருந்து இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை மகரந்தச் சேர்க்கைக்கு உகந்த நேரம். சேமித்து வைத்திருக்கும் ஆண் மகரந்தத்தூளை இந்த நேரத்தில் பெண் மரங்களின் பாளையில் சேர்க்க வேண்டும். அதாவது ஒரு மடங்கு ஆண் மகரந்தத் தூள், 20 மடங்கு மைதாமாவு இரண்டையும் கலந்துகொள்ள வேண்டும். இதை நீளமான குழாய் பொருத்தப்பட்ட டப்பாவில் கொட்டி, பெண் பூவில் தெளித்துவிட வேண்டும். இப்படி மகரந்தச்சேர்க்கை செய்தால்தான் அனைத்து பூவும் பிஞ்சாக மாறும். இதன் குலை தென்னை மாதிரி கீழ்நோக்கி வளராமல் மேல்நோக்கி போகும். அதனால் பூ எடுத்த ஒரு மாதத்தில் மட்டையோடு சேர்த்து வளைத்து கட்டிவிடவேண்டும். தொடர்புக்கு: அன்பழகன் - 96003 21911, சிவகுமார் - 90038 09797.-கே.சத்யபிரபா, உடுமலைப்பேட்டை.

### சின்னச்சின்ன செய்திகள்

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2012,00:00 IST



**தைலமரம் (யூகலிப்டஸ்) நிழலில் ஏலம்**: கேரள வன அபிவிருத்திக்கழகம் 1965லிருந்து இதுவரை வல்லக்கடவு, வண்டிப்பெரியார் போன்ற பகுதிகளில் 30,000 எக்டர் பரப்பில் தைல மரங்களை நடவு செய்துள்ளனர். ஏலம் நடவு செய்வதற்கு ஏதுவாக 10 அடிக்கு 5 அடி இடைவெளியில் தைலமரங்களை நடவு செய்துள்ளனர். தைல மரங்களை 8-10 அடி உயரத்திற்கு மேல் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் வெட்டி விடுகின்றனர். ஜுலை-ஆகஸ்ட் மாதங்களில் ஏலச்செடி நடவு செய்கின்றனர்.

ஏலம் வளர்வதற்கு 50-60 சத நிழல் தேவைப்படுகிறது. தைல மரங்களில் ஏலச்செடிகளுக்கு போதிய நிழல் கிடைக்கிறது. தைல மரங்கள் பிப்ரவரி - மார்ச் மாதங்களில் பூக்கின்றன. ஏலச்செடியில் பூக்கள் தோன்றுவது மே முதல் ஆகஸ்ட் வரை அதிகமாக இருக்கும். எனவே ஏலத்தில் தேனீக்களின் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதில் பாதிப்பில்லை.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை தைல மரங்களை ஏலச்செடிகளுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் கொப்பு களை வெட்டிவிடுவதால் அதிக விறகு கிடைப்பதுடன் ஏலக்காய் விளைச் சலும் அதிகமாக வாய்ப்புள்ளது. ஏலச்செடிகளுக்கு போதிய வெளிச்சம் கிடைப்பதால் ஏலச்செடிகளைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களால் ஏற்படும் சேதங்களைத் தவிர்க்கிறது.

குரங்கு, காட்டுப்பன்றி, நரி, பாம்பு, காட்டு ஆடு, மான், முள்ளம்பன்றி, எலி, பூச்சிகள், யானை போன்ற வனவிலங்குகளுக்கு தைல மரக்காடுகள் உகந்தது அல்ல. தைல மரங்களுக்கு இடையே நட்ட ஏலத்திலிருந்து சூரக்கூடி பகுதியில் எக்டருக்கு 400 கிலோ வரை ஏலக்காய் விளைச்சல் கிடைத்துள்ளது. இதற்கு முன் இந்த பகுதி வெறும் புல்தரையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. தைல மரங்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மிகவும் குறைவாக உள்ளது. அவை எளிதில் தீப்பிடிக்காத தைல மரங்களை அறுவடை செய்வதும் ஏலம் மறு நடவு செய்வதும் 12-15 வருடத்தில் ஒன்றாக மேற்கொள்ள முடியும். தைல மரங்கள் அதிக விளைச்சல் தருகிறது. ஒரு எக்டர் பரப்பில் உள்ள தைல மரக்காடுகள் வருடத்திற்கு 34 டன் கரியமில வாயுவை எடுத்துக்கொள்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (**தகவல்**: ஆங்கிலத்தில் கே.வி.எஸ்.கிருஷ்ணன், தமிழில் எம்.எஸ்.ராமலிங்கம், ஸ்பைசஸ் இந்தியா, பிப்ரவரி2012)

**கால்நடைகளுக்கு மூலிகை குடற்புழு நீக்க மருந்து தயாரிக்கும் முறை:**

சோற்றுக்கற்றாழை-1கிலோ,

நொச்சி இலை-1 கிலோ,

வேப்பிலை-1 கிலோ,

சுண்டக்காய்-1 கிலோ,

ஆடாதொடை-1 கிலோ,

எருக்கன் இலை-1 கிலோ,

பீகாரி சங்கு இலை-1 கிலோ,

பிரண்டை-1 கிலோ,

வேலிப்பருத்தி-1 கிலோ,

சிரியாநங்கை-100 கிராம்.

இவைகளை ஒன்றாக கலந்து நன்கு ஆட்டி சாறு எடுத்து வடிகட்டி ஒரு பாட்டிலில் எடுத்துக் கொள்ளலாம். பெரிய கால்நடைகளுக்கு 100 முதல் 150 மில்லியும், ஆடுகளுக்கு 30 மில்லியும், குட்டிகளுக்கு 5 முதல் 10 மில்லியும், கன்றுகளுக்கு 30 முதல் 50 மில்லியும் காலையில் வெறும் வயிற்றில் கொடுக்கலாம். மருந்து கொடுப்பதற்கு முன் கால்நடை மற்றும் ஆடுகளின் சாணி மற்றும் புழுக்கையினை எடுத்து கால்நடை மருத்துவமனையில் கொடுத்து என்னென்ன புழுக்கள் உள்ளன என்று பரிசோதனையில் தெரிந்துகொள்வது அவசியம்.

அத்துடன் கால்நடைகளின் எடையையும் எடுத்து குறித்துக்கொள்ள வேண்டும். சாணி மற்றும் புழுக்கைகளை எடுத்து எவ்வாறு புழுக்கள் ஒழிந்துள்ளன என்று தெரிந்துகொள்ளலாம். உடல் எடை கூடியுள்ளதையும் கறவைமாடுகளின் பாலின் அளவு கூடியுள்ளதையும் தடிமனான ரோமம் உதிர்ந்து தோல் மினு மினுப்பு பெற்று இருப்பதையும் உறுதிசெய்து கொள்ளலாம். கால்நடைகளுக்கு ஒவ்வொரு 3 மாதங்களுக்கு ஒருமுறை மூலிகை குடற்புழு மருந்தினை கொடுத்துவந்தால் வயிற்றில் உள்ள குடற் புழுக்கள் முழுவதும் இறந்துவிடும்.

ஆடு வளர்ப்பினை முழுநேர தொழிலாக கொண்டவர்களுக்கும், ஊர் ஊராக ஓட்டிச் சென்று பட்டி போட்டு அடைக்கும் குரும்பையாடு வளர்ப்போருக்கும் மூலிகை குடற்புழு நீக்க மருந்து மிகமிக அவசியம்.

(தகவல் மற்றும் தொடர்புக்கு: கே.வி.கோவிந்தராஜ், ஜெயம் பிராணி நல அறக்கட்டளை, கவுந்தப்பாடி, ஈரோடு-638 455. 94425 41504, 98427 04504).-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## பூஜ்ய உழவு

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2012,00:00 IST

இன்றைய சூழ்நிலையில் உழவு முறைகளில் குறிப்பிட்ட மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன மற்றும் பல்வேறு புதிய முறைகளான மிகக்குறைந்த உழவு, பூஜ்ய உழவு, தாள் போர்வை உழவு ஆகியவை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
மிகவும் உயர்ந்துவரும் (கச்சா) எண்ணெய் விலையினால் குறைந்த உழவுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் பழமையான உழவு முறையில் ஏற்படும் பிரச்னைகளும் காரணம். தொடர்ந்து அதிகமாக இயந்திரங்களை பயன்படுத்துவதினால் மண் கட்டமைப்பு பாதிப்பும், கடின மண் தட்டும் ஏற்படும். மற்றும் மண் அரிப்பிற்கு வழிவகுக்கிறது.
**பூஜ்ய உழவு முறை**: உழவற்ற நிலையிலேயே பூஜ்ய உழவு என அழைக்கப்படுகிறது. குறைவான உழவு முறையின் குறைந்தபட்ச நிலையிலோ பூஜ்ய உழவு ஆகும். முதன்மை உழவு முழுவதுமாக தடுக்கப்படுகிறது மற்றும் வரிசைப்படுத்துதல் விதைப்படுக்கை தயார் செய்யும் வரை மட்டும், இரண்டாம் உழவு செய்யப்படுகிறது.
பூஜ்ய உழவுகளில் ஒரு முறை ஆகும். இந்த ஒரு தனித்துவமான ஒரே நேரத்தில் நான்கு வேலைகளை நிறைவேற்றுகிறது. பயிர் வரிசையில் குறுகிய வரிசையாக சுத்தம் செய்தல், விதைத்தலுக்கு ஏற்றவாறு துளையிடல், விதையினைத் துளையில் விதைத்தல் மற்றும் நன்றாக விதையினைகள் கொண்டு முதல் முன் பயிர் வரிசையை பெரிய சுவீப் மற்றும் வெட்டும் கத்திப்பகுதி சீரமைக்கிறது. மற்றும் (பிளான்டர்) நடவிற்கு துளையிடும் கொழு, விதைகளை விதைத்து மூடுவதற்கு ஏற்றவாறு குறுகிய துளைகளை ஏற்படுத்துகிறது.
பூஜ்ய உழவு முறையில் களைக்கொல்லியின் பயன்பாடு அதிகமாக இருக்கும். விதைப்பதற்கு முன் களைகளைக் கட்டுப்படுத்த, பரந்த வீரியம் கொண்ட இலக்கற்ற களைக்கொல்லி மருந்துகள் (எ.கா. பாராகுவாட், கிளைபோசேட்) பயன்படுத்தப்படுகிறது.
பழமையான உழவு முறை மண் அரிப்பை ஏற்படுத்துகிறது. பருவ காலங்களிலும் பயிர்கள் வளர்வதற்கு ஏற்றவாறு மண்வளத்தை பாதுகாக்க, தாள் போர்வை உழவு அல்லது தாள் போர்வை வேளாண்மை உதவுகிறது. இலையுதிர் காலங்களில் தாவரக் கழிவுகள் மேற்பரப்பில் பரவி போர்வையாக அமைகிறது. இது ஒரு வருடாந்திரப் பயிர் மேலாண்மை திட்டம் ஆகும். இதன்மூலம் மண் இளகுகிறது. தாவரக்கழிவுகளை சிறு துண்டுகளாக்குகிறது. மற்றும் களைகளை கட்டுப்படுத்த உதவுகிறது.
சுவீப்ஸ் / கத்திகள் பொதுவாக அறுவடைக்குப் பின் செய்யப்படும் முதன்மை உழவின்போது மண்ணை 12 முதல் 15 செ.மீ. ஆழம் வரை உழுகிறது. ஆழத்தைப் பொறுத்து, அடுத்துவரும் உழவு முறைகள் அமையும். பொதுவாக சட்டிக்கலப்பை போன்ற கருவிகள், தாவரக் கழிவுகள் அதிகம் உள்ளபோது முதன்மை உழவுக்கு பயன் படுத்தப் படுகிறது. இதனால் அக்கழிவுகள் மண்ணோடு

நன்றாகக் கலக்கிறது மற்றும் விரைவாக மட்டுப்படுகிறது. ஆனால் ஓரளவு கழிவுகள் மண்ணில் காணப்படும்.

**தீமைகள்**:

* குறைந்த உழவு முறையில் விதை முளைப்புத் திறன் குறைவாக இருக்கும்.

* குறைந்த உழவு முறையில் மட்கும் திறன் குறைவாக காணப்படும்.

* அவரை மற்றும் பட்டாணி போன்ற பயறுவகைத் தாவரங்களின் வேர் முடிச்சுகள் பாதிக்கப் படுகின்றன.

* வழக்கமான கருவிகளைக் கொண்டு விதைப்பு செய்வது கடினம்.

* தொடர்ந்து களைக் கொல்லிகளை பயன்படுத்தும் போது சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படுகிறது மற்றும் பல்லாண்டு வாழ் களைகள் அதிகம் வளருகின்றன.-ஆர்.ஜி.ரீஹானா, அக்ரி கிளினிக், 89037 57427.

**விண்பதியம் மூலம் இயற்கை வேளாண்மையில் முருங்கை சாகுபடி**

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2012,00:00 IST



திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு அருகே பள்ளபட்டி கிராமத்தைச் சேர்ந்த சடையப்பன், இயற்கை வேளாண்மையில் செடி முருங்கையில் விண் பதியம் மூலம் சாகுபடி செய்துவருகிறார்.

**அவருடைய சாகுபடி விபரம்:**


இப்பண்ணையில் உள்ள தோப்புகள் முழுவதும் இயற்கை வேளாண்மை முறையே

மேற்கொள்ளப்படுவதால் இந்த ரகத்தின் பாரம்பரிய குணாதி சயங்கள் எதுவும் மாறாமல் காக்கப் படுகிறது. இயற்கை முறை பராமரிப்பு என்பதால் நோய் தாக்குதல் இல்லை. இப்பண்ணையில் உருவாக்கப்படும் முருங்கை கன்றுகளுக்கு, நன்கு பராமரிக்கப்பட்டு தாய்குணம் உள்ள, அதிக காய்பிடிப்பு தன்மையுள்ள மரத்தில் விண்பதியம் மூலம் நாற்றுகள் உருவாக்கப்படுகிறது. இத்தகு முறையில் உண்டான கன்றுகள் நடவு செய்த 6-7 மாதத்திலேயே காய்த்து பலன் தரத்தொடங்கிவிடுகிறது. காய்க்கத் தொடங்கிய முதலாண்டு இறுதிக்குள் ஒரு மரமானது குறைந்தது 50 கிலோ காய்கள் வரை கொடுத்துவிடுகிறது. இரண்டாம் ஆண்டில் 3 காய்க்கும் பருவமும் சேர்த்து ஒரு மரம் 200 கிலோவிலிருந்து 250 கிலோ வரையிலும் காய்கள் பெறலாம். சரியான பராமரிப்பு, அதாவது இயற்கை முறையில் எரு, மண்புழு உரம், இயற்கை நோய் கொல்லிகள் போன்றவற்றை பயன்படுத்தியவர்கள் ஆண்டிற்கு ஒரு மரத்திலிருந்து 300 கிலோ காய்கள் வரை மகசூல் எடுத்துள்ளனர்.

ஒரு ஆண்டு காலம் மகசூல் தந்த மரங்களை தரையிலிருந்து சுமார் ஒரு மீட்டர் உயரத்தில் ஒரே மட்டமாக கவாத்து செய்தபின், வெட்டிய பகுதியில் போர்டோ கலவையை பூசி பூஞ்சாண நோய் வருவதைத் தவிர்க்கலாம். (100 கிராம் மயில் துத்தத்தையும் 100 கிராம் சுண்ணாம்பு கரைசலில் கலந்தவாறு ஊற்றி போர்டோ கலவை தயார் செய்ய வேண்டும்). இவ்வாறு கவாத்து செய்தபின் தண்டுப் பகுதியிலிருந்து கிளைகள் வளரத் தொடங்கும். பக்கவாதுகளில் நல்ல திடமான கிளைகள் 5 முதல் 7 மட்டும் விட்டுவைக்க வேண்டும். இப்படித் தோன்றும் கிளைகள் வளர்ந்து ஆறாம் மாதத்தில் பூக்கத் தொடங்கும். மீண்டும் எட்டாம் மாதம் முதல் பத்தாம் மாதம் வரையில் காய்கள் கிடைக்கும். அறுவடை முடிந்தபின் செடிகளை அடியுடன் அப்புறப்படுத்திவிட்டு மறுநடவு செய்யலாம். மொத்தத்தில் செடி முருங்கை மூன்று ஆண்டுகள் வரை பலனளிக்கும். ஒவ்வொரு முறை கவாத்து செய்தபிறகு பரிந்துரை செய்யப்பட்டு தழை, மணி, சாம்பல் சத்து உரங்களோடு மக்கிய தொழு உரம் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும். இச்செடி முருங்கையை சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு சுமார் 2500-300 ரூபாய் வரை செலவாகிறது. ஒரு ஏக்கரிலிருந்து ஆண்டொன்றிற்கு குறைந்தபட்சம் 15,000 ரூபாய் வருமானம் கிடைக்கும். **தொடர்புக்கு:** கே.பி.எம்.சடையாண்டி, 97913 74087, 98650 78101.

**நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில்... கூடுதலாக 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி**

மார்ச் 28,2012,00:11




புதுடில்லி,: நடப்பு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), கூடுதலாக, 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய, மத்திய அமைச்சரவை குழு அனுமதி அளித்துள்ளது. பொது உரிமம் அடிப்படையில், இந்த 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.நடப்பு சர்க்கரை பருவத்தில், இதுவரை, 20 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 30 லட்Œம் டன் ஏற்றுமதிதற்போது, கூடுதலாக 10 லட்சம் டன் ஏற்றுமதி செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை அடுத்து, நடப்பு பருவத்தில், மொத்த சர்க்கரை ஏற்றுமதி, 30 லட்சம் டன்னாக இருக்கும். கடந்த சர்க்கரை பருவத்தில், பொது உரிமம் அடிப்படையில், 26 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பு 2011-12ம் சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.60 கோடி டன்னாக இருக்கும் என, இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் (இஸ்மா) மதிப்பீடு செய்துள்ளது. கடந்த சர்க்கரை பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.43 கோடி டன்னாக இருந்தது.அதேசமயம், மத்திய உணவு அமைச்சகத்தின் மறுமதிப்பீட்டின் படி, நடப்பு சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.52 கோடி டன்னாக இருக்கும் என்றும், முதல் மதிப்பீட்டில், இது, 2.46 கோடி டன்னாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டிருந்தது.மத்திய அரசு, நடப்பு சர்க்கரை பருவத்தில், ஒட்டுமொத்த அளவில், 30 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளித்துள்ளது. அதிகளவில் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளித்துள்ளதால், உள்நாட்டில் சர்க்கரை விலை உயர வாய்ப்பில்லை என எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரை கையிருப்புஏனெனில், உள்நாட்டில், சர்க்கரைக்கான தேவை, 2.20 கோடி டன் என்றளவில் தான் உள்ளது. ஏற்றுமதி செய்த நிலையிலும், சர்க்கரை கையிருப்பு, போதிய அளவிற்கு இருக்கும் என்ற மதிப்பீட்டால், இதன் விலை உயராது என, சர்க்கரை துறை வட்டாரத்தினர் தெரிவித்தனர்.உலகளவில், சர்க்கரை உற்பத்தியில், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. உள்நாட்டில், கரும்பு உற்பத்தியில் ஈடுபட்டு வரும், மாநிலங்களில், இதன் உற்பத்தி கடந்த ஆண்டை விட, நல்ல அளவில் அதிகரித்துள்ளது.நிலுவைத் தொகைகூடுதலாக, 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளித்துள்ளதால், சர்க்கரை ஆலை நிறுவனங்கள், விவசாயிகளுக்கு கரும்பிற்கான, நிலுவை தொகையை உடனடியாக அளிக்க முடியும் என

எதிர்பார்க்கப்படுகிறது.சென்ற பிப்ரவரி 29ம் தேதி நிலவரப்படி, சர்க்கரை ஆலை நிறுவனங்கள், விவசாயிகளுக்கு கரும்பை கொள்முதல் செய்த வகையில், 8,450 கோடி ரூபாய் அளவிற்கு நிலுவை தொகை வைத்துள்ளன. ஏற்றுமதியின் வாயிலாக சர்க்கரை ஆலைகளுக்கு, ஒரு கிலோ சர்க்கரை விற்பனையின் மூலம் 2.50-3 ரூபாய் அளவிற்கு கூடுதல் லாபம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இத்தொகையைக் கொண்டு, சர்க்கரை ஆலைகள் நிலுவை தொகையை விவசாயிகளுக்கு அளிக்க முடியும் என "இஸ்மா' அமைப்பின் உயரதிகாரிகள் தெரிவித்தனர்.கூடுதலாக, 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு, அனுமதி அளிக்கப்பட்டுள்ளதற்கு, "இஸ்மா' அமைப்பு வரவேற்பு தெரிவித்துள்ளது. அதேசமயம், மார்ச் மாத இறுதிக்குள் அனுமதிக்கப்பட்ட சர்க்கரையை ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான், சர்க்கரை ஆலைகள், பருவம் முடிவதற்குள் அதாவது, ஏப்ரல் மாத இறுதிக்குள், அதிகளவில் மூலச் சர்க்கரையை உற்பத்தி செய்ய முடியும் என இச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## மஞ்சள் அறுவடைக் கூலி கடும் உயர்வு இயந்திரங்கள் பயன்படுத்தும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2012,02:52 IST

கருத்தை பதிவு செய்ய

தம்மம்பட்டி ;மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில், அறுவடைக் கூலி கடுமையாக உயர்ந்துள்ளதால், தம்மம்பட்டி பகுதி விவசாயிகள், இயந்திரங்களை பயன்படுத்தி அறுவடை செய்கின்றனர்.

தம்மம்பட்டி சுற்று வட்டாரத்தில், செந்தாரப்பட்டி, தகரப்புதூர், கொண்டையம்பள்ளி, வாழக்கோம்பை, உலிபுரம் பகுதிகளில், 1,000 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது.கடந்த ஆண்டு, ஒரு குவிண்டால் மஞ்சள், 17 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. அதனால், அதிக பரப்பளவில், விவசாயிகள் ஆர்வமுடன் மஞ்சள் பயிரிட்டனர். கடந்த ஆண்டு, ஏக்கருக்கு, 6,500 ரூபாயாக இருந்த அறுவடைக்கூலி தற்போது, 13 ஆயிரமாக அதிகரித்து விட்டது. மஞ்சள் விலையும் ஒரு குவிண்டால், மூன்று முதல் நான்கு ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே விலை போவதால், விவசாயிகள் கடும் விரக்தி அடைந்துள்ளனர். அறுவடை செய்ய கூலி உயர்ந்துள்ள நிலையில், விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், நஷ்டத்தை குறைக்க மினி டிராக்டர் மற்றும் மஞ்சள் அறுவடை இயந்திரத்தை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். இதன்மூலம், ஏக்கருக்கு, மூன்று ஆயிரம் ரூபாய் செலவில் அறுவடை முடிந்துவிடுகிறது.

இது குறித்து, விவசாயி ராஜேஷ்கண்ணா கூறியதாவது: ஒரு ஏக்கரில் பயிரிட்ட மஞ்சளை வெட்டி எடுத்து தரம் பிரித்து, வேகவைத்து, பதப்படுத்தி, பாலீஷ் செய்ய, 50 ஆயிரம் ரூபாய் வரை

செலவாகிறது. அறுவடைக்கு இயந்திரங்களை பயன்படுத்தினால், 10 ஆயிரம் ரூபாய் செலவு குறைகிறது.போதிய அளவில் மஞ்சள் அறுவடை இயந்திரங்கள் இல்லாததால், ஆட்கள் மூலம் அறுவடை செய்ய நேரிடுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**பால் உற்பத்தியை அதிகரிக்க சங்க உறுப்பினர்களுக்கு யோசனை**

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2012,02:29 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: ஈரோட்டில் ஆவின் பால் உற்பத்தி நிறுவனம் சார்பில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடந்தது. ஈரோடு மாவட்ட ஆவின் பால் உற்பத்தி நிறுவனத்தின் கீழ், 730 கிராமப்பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன. இதில், 280 பால் உற்பத்தி சங்கங்களில், பால் உற்பத்தி குறைந்து கொண்டே வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இக்கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்கள், தங்கள் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களிடம் பால் உற்பத்தியையும், கொள்முதலையும் அதிகரிக்க துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து சங்கங்களின் உற்பத்தியாளர்கள், பால் உற்பத்தியை அதிகரித்து, சங்கங்களுக்கு அதிகளவில் பாலை வழங்க வேண்டும். பால் உற்பத்தியை அதிகரித்தால், கொள்முதலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. கிராம பால் உற்பத்தியாளர் சங்கங்களின் உற்பத்தியாளர்கள், அதிக அளவில் சங்கங்களுக்கே பாலை விற்பனை செய்ய வேண்டும். அதிகமாக பால் வழங்கினால்தான், சங்கம் அதிக லாபத்தை ஈட்ட முடியும். இதற்காக சங்கங்களின் செயலாளர்கள், மண்டல அலுவலர்கள் அனைவரும் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், என யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆவின் பொது மேலாளர் சுப்பிரமணியம், துணைப்பதிவாளர் (பால்வளம்) சபாரெத்தினம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விற்பனை மோசடி அறிய விவசாயிகள் ஆய்வுக்குழு**

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2012,02:29 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: மஞ்சள் விற்பனையில் ஏற்படும் முறைகேடுகளை ஆய்வுசெய்ய, இந்திய விவசாயிகள் சங்கம் சார்பில் ஆய்வுக்கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க, கொள்கை பரப்புச் செயலாளர் தங்கராஜ் அறிக்கை: ஈரோட்டில் அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிமார்க்கெட், ஈரோடு மற்றும் கோபி கூட்டுறவுச் சங்கம் ஆகிய நான்கு அமைப்புகள் மூலம் விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சளை விற்றுக்கொடுக்கும் பணி நடக்கிறது. ஈரோட்டில், 60 சதவீதத்துக்கு மேல் தனியார் மஞ்சள் மண்டியில் விற்பனை செய்கின்றனர்.
விவசாயிகள் மஞ்சளை கொண்டு வந்து விற்பனை செய்யும் போது, பல்வேறு முறைகேடுகள் நடக்கின்றன. இதில், விலை, எடை, விற்பனைக் கமிஷன், வட்டி, பணம் பட்டுவாடா, கூலி, குடோன் வாடகை போன்றவற்றில் ஏமாற்றப்படுவதாகவும், சரக்கு ஒப்படைச்சீட்டு வழங்குவதில்லை எனவும் விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.
புகாரின்படி, மோசடிகள், குறைகள் மற்றும் தவறுகளை ஆய்வுசெய்து, அறிக்கை அளிக்க, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் தெய்வசிகாமணி தலைமையில் ஆய்வுக் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. இதில், மாநிலச் செயலாளர் நஞ்சப்பன், ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் கைலாசம், துணைத் தலைவர் செல்வசுந்தரம், தேசியக்குழு உறுப்பினர் கணேஷ் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தவிர, 31ம் தேதிக்குள் இக்கமிட்டி உறுப்பினர்கள் ஆய்வு அறிக்கை அளிப்பர். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இயற்கை விவசாய தோட்டத்தை வெளிநாட்டு விவசாயிகள் பார்வை

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2012,02:29 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: கோபி புதுக்கரை புதூரில் உள்ள இயற்கை விவசாய தோட்டத்தை, வெளிநாட்டு விவசாயிகள் பார்வையிட்டனர்.
கோவை சூளூர், ஊட்டியில் உலக விவசாயிகள் கருத்தரங்கம் நடக்கிறது. கருத்தரங்கில் உலக விவசாயிகள், 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டுள்ளனர். கோபி அருகே புதுக்கரை புதூரில் உள்ள இயற்கை விவசாய தோட்டத்தை இவர்கள் நேற்று பார்வையிட்டனர். இயற்கை விவசாய தோட்டத்தில் வாழை, மாதுளை, தென்னை உள்ளிட்ட, 17 வகையான பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.
மத்திய தென்னை வாரிய உறுப்பினர் செல்லமுத்து கூறியதாவது: உலக விவசாயிகள் கருத்தரங்கம் மார்ச், 25 முதல், 27 வரை சூளூரில் நடந்தது. கருத்தரங்கில் இந்தோனேஷியா, தென்கொரியா, கனடா, கொலம்பியா, ஸ்பெயின், நேபாளம், பிரேஸில், நெதர்லாந்து, நிகரகோவா, போர்ச்சுக்கல் நாடுகளை சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மாநாட்டில், இயற்கைக்கு எதிரான விவசாயத் தொழிலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக புவி வெப்பமடைதல், சுற்றுச்சூழல் சீர்கேடு,

பிளாஸ்டிக்கால் ஏற்படும் பாதிப்பு, ஓசோன் மண்டல பாதிப்பு, உலககெங்கும் பன்னாட்டு கம்பெனிகளுக்காக விவசாய நிலங்களை அரசுகள் ஆர்ஜிதம் செய்வதை எதிர்ப்பது, ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லியால் மண்ணுக்கும், மனிதனுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

நாளை (இன்று) ஊட்டியில் நான்கு நாட்கள் கருத்தரங்கம் நடக்கிறது. கருத்தரங்கின் முடிவில் நிறைவேற்றப்படும் தீர்மானம் இந்திய மற்றும் அந்தந்த நாட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

புதுக்கரைபுதூர் கிராமத்தில் ரசாயன உரம், பூச்சிக்கொல்லி இல்லாமல் மேற்கொள்ளப்படும் இயற்கை பண்ணைக்கு பன்னாட்டு பிரதிநிதிகளை அழைத்து வந்துள்ளோம். ஒரு ஏக்கரில், 17 வகையான மரங்களும், வேளாண் பயிர்களும் பயிரிடப்பட்டுள்ளன.

சாதாரணமாக ஒரு ஏக்கரில் பெறும் லாபத்தை விட, இயற்கை உரத்தில் அதிக லாபம் பெற முடியும் என விளக்கி உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

### "மஞ்சள்' மலர்களை வளர்க்க வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2012,23:51 IST

கருத்தை பதிவு செய்ய

கூடலூர் :"முதுமலை, பந்தலூரில் ரம்மியத்தை ஏற்படுத்தி வரும் கொன்றை மலர் செடிகளை அதிகளவில் வளர்க்க வேண்டும்,' என வலியுறுத்தப்பட்டுள்ளது.

முதுமலை புலிகள் காப்பகத்தில் ஏற்பட்ட வறட்சி, மற்றும் வனத்தீ காரணமாக கடந்த 5ம் தேதி முதல் வனப்பகுதி மூடப்பட்டது. தற்போது வனப்பகுதியிலுள்ள பெரும்பாலன மரங்கள், செடிகள் காய்ந்து பசுமையின்றி காணப்படுகிறது.

ஆனால், தொரப்பள்ளி முதல் அபயாரண்யம் இடைப்பட்ட பகுதியிலும், பந்தலூர் சுற்றுப்புற பகுதி களிலும் சாலையோர மரங்களில் கொன்றை மலர்கள் பூத்து ரம்மியத்தை ஏற்படுத்துகின்றன. இது பயணிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதன் செடிகளை அதிகளவில் வளர்க்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### தரமான விதைகள் வழங்க அறிவுரை

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2012,23:15 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் : மாவட்ட விதை பரிசோதனை ஆய்வகத்தில், விதைச்சான்று இணை இயக்குனர் திடீர் ஆய்வு மேற்கொண்டார். திருவள்ளூரில் விதை பரிசோதனை ஆய்வகம் இயங்கி வருகிறது. இந்த ஆய்வகத்தை, கோவை விதைச்சான்று இணை இயக்குனர் தங்கராஜ் திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது விதை மாதிரி பகுப்பாய்வு பணிகள், விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம் கணக்கிடுதல் மற்றும் பிற ரக கலப்பு கணக்கிடும் முறைகள், முளைப்புத்திறன் கணக்கீடு முறைகள், காப்பு மாதிரிகள், பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் ஆய்வக பணிகளை ஆய்வு செய்தார்.
மேலும், தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைத்திட, துல்லியமாக ஆய்வு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என, வேளாண்மை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

**வீரிய ஒட்டு விதைகள் மூலம் கூடுதல் காய்கறி மகசூல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 27,2012,23:06 IST

திருவள்ளூர் : பாகல், பீர்க்கன், புடலை, சுரை போன்ற காய்கறிகளில் வீரிய ஒட்டு விதை ரகங்களை பயன்படுத்தி, பயிர் செய்தால், 20 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெறலாம் என, வேளாண் பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.
காய்கறி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், வேளாண் விஞ்ஞானிகள் வீரிய ஒட்டு விதை ரகங்களை கண்டுபிடித்து வருகின்றனர். இதன்படி, பாகல் (அபிஷேக்), பீர்க்கன் (என்.எஸ்., 4, 5), புடலை (கோ-2), சுரை (என்.எஸ்., 421, 62550) ஆகிய காய்களுக்கு, வீரிய ஒட்டு விதை ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
பயிர் பாதுகாப்பு
பொதுவாக, இப்பயிர்களுக்கு அசுவினி, இலைத் துளைப்பான், பழ ஈ, வாடல், இலைப்புள்ளி, அடிச்சாம்பல் மற்றும் சாம்பல் ஆகிய நோய்கள் ஏற்படும். இவற்றை கட்டுப்படுத்த, டைமெத்தோயேட், ஹோஸ்டாத்தியான், கார்பரில், மாலத்தியான், டைத்தேன், பெவிஸ்டின், கராத்தேன் ஆகிய மருந்துகளை தெளிக்க வேண்டும்.
மகசூல்
இதுகுறித்து, திருவூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தலைவர் தேவநாதன் கூறும்போது, ""இவ்விதைகள் விதைத்த, 60வது நாள் முதல் அறுவடை செய்யத் துவங்கலாம். ஒரு ஹெக்டேருக்கு, 38 முதல் 45 டன் வரை மகசூல் கிடைக்கும். சாதாரண விதைகளை கொண்டு பயிர் செய்தால் கிடைக்கும் மகசூலை விட, 20 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும்" என்றார்.

---

தினகரன்

## வம்பன் வேளாண் நிலையத்தில் விவசாயிகளுக்கு களை, உர நிர்வாக பயிற்சி இன்று நடக்கிறது

***கருத்துகள்***

பதிவு செய்த நேரம்:2012-03-27 11:03:57

புதுக்கோட்டை: வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த களை மற்றும் உர நிர்வாகம் குறித்த பயிற்சி இன்று நடைபெறுகிறது. இதுகுறித்து கலெக்டர் மகேஸ்வரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பல்வேறு வகையான களைகள் பயறு வகை பயிர்களின் ஆரம்ப கால வளர்ச்சியோடு போட்டியிட்டு மகசூலை பாதிக்கிறது. மேலும் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை தேவையான தருணத்தில் அளிப்பது அவசியமாகிறது.

இது தொடர்பாக புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் இன்று(27ம்தேதி)காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த களை மற்றும் உர நிர்வாகம் குறித்த பயிற்சி நடைபெறுகிறது. பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பயறு சாகுபடியாளர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெறலாம். மேலும், விவரங்களுக்கு 04322-290321 என்ற தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டறிந்து கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

## 14.7 மெட்ரிக் டன் நெல் வரத்து நெல் மறைமுக ஏலத்தில் விவசாயிகள் ஆர்வம்

***கருத்துகள்***

பதிவு செய்த நேரம்:2012-03-27 12:03:40

நாகர்கோவில்: நாகர்கோவிலில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடைபெறும் நெல் மறைமுக ஏலத்தில் விவசாயிகள் அதிக ஆர்வத்துடன் கலந்துகொள்கின்றனர். நேற்று 14.7 மெட்ரிக் டன் நெல் கொண்டு வரப்பட்டது.

குமரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் தனியார் ரைஸ்மில்களில் விற்பனைக்கு விவசாயிகள் கொண்டு செல்கின்றனர். தற்போது அறுவடை சீசன் என்பதால் நெல்லுக்கு உரிய விலை கிடைப்பது இல்லை. மேலும் இங்கு இடைத்தரகர்கள் பிரச்னை, நெல்லுக்கு உரிய விலை கிடைப்பது இல்லை என்பது போன்ற புகார்கள் எழுந்தன. இதனை தொடர்ந்து மறைமுக ஏலம் மூலம் நெல் கொள்முதல் செய்ய நாகர்கோவிலில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநருக்கு

மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தி இருந்தார்.

அந்த வகையில் நாகர்கோவில் வடசேரியில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று நெல் மறைமுக ஏலம் காலை துவங்கியது. இதில் முஸ்தபா, பழனியாபிள்ளை, செல்லத்துரை, தங்கப்பன் உட்பட 8 விவசாயிகள் கலந்துகொண்டனர். மொத்தம் 14.7 மெட்ரிக் டன் நெல் கொண்டுவரப்பட்டது. இந்த மறைமுக ஏலம் நிகழ்ச்சியில் வேளாண்மை துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். இது தொடர்பாக கன்னியாகுமரி விற்பனை குழு செயலாளர் ஜாண் கிறிஸ்டோபர் சிங் செல்வம் கூறியதாவது:

வடசேரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக ஏலம் மூலம் நெல் விற்பனை நடைபெற்றது. இதில் ஐந்து விவசாயிகள் கலந்துகொண்டனர். மூன்று வணிகர்களும் பங்கேற்றனர். மொத்தம் 5.1 மெட்ரிக் டன் நெல் கோட்டைக்கு (87 கிலோ) ணீ730 வீதம் விற்பனை செய்யப்பட்டது.

இதர மூன்று விவசாயிகளும் அவர்கள் கொண்டு வந்த 9.6 மெட்ரிக் டன் நெல்லை ஒழுங்குமுறை விற்பனை கூட கிட்டங்கியில் இருப்பு வைத்து பொருளீட்டுக்கடன் பெற விருப்பம் தெரிவித்தனர். அந்த நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் நெல் விலை உயரவும் வாய்ப்பு இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

தினத்தந்தி
DAILY THANTHI

## *நடப்பு பருவத்தில், கூடுதலாக 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*மத்திய அரசு நடப்பு 2011–12 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) கூடுதலாக பத்து லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.*

*சர்க்கரை உற்பத்தி குறித்த மதிப்பீடு முந்தைய 2.46 கோடி டன்னிலிருந்து 2.52 கோடி டன்னாக உயர்த்தப்பட்டுள்ளதே இதற்கு காரணமாகும். அதே சமயம் சந்தை வட்டாரங்கள் சர்க்கரை உற்பத்தி இதையும் விஞ்சி 2.60 கோடி டன்னாக அதிகரிக்கும் என தெரிவித்துள்ளன. முந்தைய 2010–11 பருவத்தில் இது 2.43 கோடி டன்னாக இருந்தது.*

*மத்திய அரசு நடப்பு பருவத்தில் ஏற்கனவே இரண்டு கட்டங்களில் தலா 10 லட்சம் டன் என்ற அடிப்படையில் மொத்தம் 20 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்திருந்தது. புதிய மதிப்பீடுகள் சர்க்கரை ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை மேலும் அதிகரித்துள்ளன. இந்தியா உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், பயன்பாட்டில் முதலிடத்திலும் உள்ளது. நம் நாட்டில் தற்போது ஆண்டு சர்க்கரை பயன்பாடு 2.20 கோடி டன்னாக உள்ளது. கடந்த பருவத்தில் 26 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.*

## இலக்கை எட்ட, ஆண்டுதோறும் உணவு தானியங்கள் உற்பத்தி 1.34 சதவீதம் உயர வேண்டும்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு.புதுடெல்லி*

*2020–21–ஆம் நிதி ஆண்டுக்குள் உணவு தானியங்கள் உற்பத்தியை 28 கோடி டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த இலக்கை எட்ட வேண்டுமானால் ஆண்டுதோறும் உற்பத்தி 1.34 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய வேளாண் துறைக்கான ராஜாங்க அமைச்சர் சரண் தாஸ் பாராளுமன்ற மக்களவையில் சமர்ப்பித்த தனது பதில் ஒன்றில் இதனை தெரிவித்துள்ளார்.*

*ஏப்ரல் 1–ந் தேதி பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலம் (2012–2017) தொடங்குகிறது. திட்ட காலத்தின் இறுதி ஆண்டில் (2016–17) அரிசி தேவைப்பாடு 11.02 கோடி டன்னாகவும், கோதுமைக்கான தேவை 8.91 கோடி டன்னாகவும் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு 2011–12 வேளாண் பருவத்தில் நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி ஒட்டுமொத்த அளவில் 25.04 கோடி டன்னாக இருக்கும் என தெரிகிறது. இதில் நெல் அரவைக்குப் பிறகான அரிசி உற்பத்தி 10.28 கோடி டன்னாகவும், கோதுமை உற்பத்தி 8..83 கோடி டன்னாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் அரிசிக்கான தேவை 9.88 கோடி டன்னாகவும், கோதுமை தேவைப்பாடு 7.74 கோடி டன்னாகவும் இருக்கும் என இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, தேவைப்பாட்டை விஞ்சி உற்பத்தி அதிகரிக்கும் நிலை உள்ளது. இதனால் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.*

## மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும்

## தமிழ்நாடு கள் இயக்கம் தீர்மானம்

கோவை, மார்ச்.28–

மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு கள் இயக்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

ஆலோசனைக் கூட்டம்

தமிழ்நாடு கள் இயக்க ஆலோசனைக் கூட்டம் கோவையில் நடைபெற்றது. இதற்கு கள் இயக்க கள ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் க.அருணாசலம், சட்ட ஆலோசகர்கள் லட்சுமணநாராயணன், பி.திருஞானசம்பந்தம், ஆர்.திருஞானசம்பந்தம், ரங்கசாமி, தமிழக விவசாயிகள் சங்க தலைவர் எஸ்.ராமசாமி, ஆலோசகர் பி.கே.ராமசாமி, கள் இயக்க மாநில அமைப்பாளர் இல.கதிரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், இந்தியாவில் லஞ்சமும், ஊழலும் எல்லை மீறி சென்று கொண்டு இருப்பதால், லோக்பால் அமைப்பும், மாநில அளவில் லோக் அயுக்தா அமைப்புகளும் உருவாக்கப்பட வேண்டும். அவற்றை நடப்பு நாடாளுமன்றம் மற்றும் சட்டபேரவை கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற வேண்டும்.

மஞ்சள் கொள்முதல்

விவசாய விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல், விவசாயிகள் மிகவும் நஷ்டத்துக்கு ஆளாகி வருகின்றனர். இதற்கு தீர்வு காண வேண்டும்.

கடந்த ஆண்டு ரூ.17–க்கு விற்ற மஞ்சள் தற்போது ரூ.4 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது. மஞ்சளை பதப்படுத்தி 15 ஆண்டுகள் வரை கெடாமல் இருப்பு வைத்து விற்பனை செய்யலாம். எனவே மஞ்சள் சாகுபடிக்கான செலவினங்களை அரசே கணக்கிட்டு கட்டுபடியான விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய வேண்டும். அப்படி செய்தால் விலை வீழ்ச்சியை தடுக்க முடியும்.

விலையை குறைக்க வேண்டும்

காங்கயம் காளைகள் இனம் அழிவின் விழிம்பில் நிறுத்தப்பட்டு உள்ளது. எனவே அந்த இன கால் நடைகளை காக்க அரசு முன் வர வேண்டும்.

வேளாண் விளை பொருட்களின் விலை குறைந்து வருவதால் ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மது விற்பனை

டாஸ்மாக் மதுக்களை ஒழிக்கும் வரை தென்னை பொருட்களை மூலப்பொருளாக கொண்டு மதுக்கள் தயாரிக்க வேண்டும். அவற்றை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சந்தைப்படுத்த வேண்டும். இலங்கையில் விவசாயிகளிடம் இருந்து கள்ளை பனை, தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் கொள்முதல் செய்கிறது. அவற்றை ஒவ்வொரு ஒன்றியங்களிலும்

பதப்படுத்தி பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்கிறார்கள். மீதமாகும் கள்ளை ஒன்றியங்களுக்கு சொந்தமான வடிப்பகங்களில் காய்ச்சி வெளிநாட்டு மதுக்களை தயாரிக்கிறார்கள். இதே போன்ற ஒரு முறையை தமிழ்நாட்டிலும் கொண்டு வர வேண்டும்.தென்னை விவசாயிகள் நல வாரியம், பனை தொழிலாளர் நல வாரியத்துக்கு பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும் என்பது உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 2050–ல் ஒரு எக்டேர் நிலத்தில் 5.25 டன் உணவு உற்பத்தி செய்ய இலக்கு அரசு தொழில்நுட்ப கல்லூரி கருத்தரங்கில் தகவல்



விழாவில், மத்திய நீர்வள ஆணைய தலைமை பொறியாளர் மகேந்திரன் மாணவ–மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கிய காட்சி. அருகில் கல்லூரி முதல்வர் சுந்தரராஜன், துறைத் தலைவர் ஐசக் சாலமன் ஜெயமணி ஆகியோர் உள்ளனர்.

கோவை,மார்ச்.28–

2050–ல் ஒரு எக்டேர் நிலத்தில் 5.25 டன் உணவு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது என்று அரசு தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தேசிய கருத்தரங்கம்

கோவை, தடாகம் ரோட்டில் உள்ள அரசு தொழில்நுட்ப கல்லூரியின் சிவில் என்ஜினீயரிங் துறை சார்பில், 'ஜியோ பெஸ்ட்–2012' என்ற தலைப்பில் 2 நாள் தேசிய கருத்தரங்கம் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது.

இதன் தொடக்கவிழாவிற்கு கல்லூரி முதல்வர் சுந்தரராஜன் தலைமை தாங்கினார். துறைத்தலைவர் ஐசக் சாலமன் ஜெபமணி வரவேற்றார். மத்திய நீர்வள ஆணைய தலைமை பொறியாளர் மகேந்திரன் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கருத்தரங்கை தொடங்கி வைத்து, 'தண்ணீர் மற்றும் உணவு பாதுகாப்பு' என்ற தலைப்பில் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

நீர்–உணவு பாதுகாப்பு

முதன்முறையாக 1987–ல் இந்தியாவில் நீர்வள தினம் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து

1992–ல் சர்வதேச தூய்மை நீர் தினம் கடைப்பிடிக்க பரிந்துரைக்கப்பட்டது. 1993–ம் ஆண்டு மார்ச் 22–ந் தேதி உலக தண்ணீர் தினமாக ஐ.நா.சபையில் அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு மைய கருத்தை வலியுறுத்தி, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டு நீர் மற்றும் உணவு பாதுகாப்பு என்ற கருத்தை மையப்படுத்தி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மற்றும் கேரளாவில் உள்ள பழங்குடியின மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தற்போது உணவு பாதுகாப்பு என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது அதன்படி 121 கோடி மக்களுக்கு உணவு வழங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 780 கிராம் வரை உணவு தேவைப்படுகிறது. ஆனால் நீராதாரங்களாக விளங்கும் குளங்கள், உற்பத்தி நிலங்கள் குடியிருப்பு பகுதிகளாக மாறிவருவதால் விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்து வருகிறது.

இதனால் வரும்காலங்களில் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி செய்ய முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. உணவு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் குறைந்த அளவில், அதிக உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டியது அவசியம். இதற்கு தேவையான தண்ணீரை சேமித்து பாதுகாக்க வேண்டும்.

உணவு உற்பத்தி இலக்கு

2010–ல் ஒரு எக்டேர் நிலத்தில் 4.1 சதவீதம் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. இது 2025–ல் ஒரு எக்டேர் நிலத்தில் 4.65 டன் உற்பத்தி செய்யப்பட உள்ளது. 2050–ல் ஒரு எக்டேர் நிலத்தில் 5.25 டன் உணவு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் பல்வேறு என்ஜினியரிங் கல்லூரிகளை சேர்ந்த மாணவ–மாணவிகள் கலந்து கொண்டு ஆய்வு கட்டுரைகள் சமர்பித்தனர். பின்னர் மாடல் மேக்கிங், கட்டிட வரைபடம் வரைதல், வினாடி–வினா ஆகிய போட்டிகள் நடைபெற்றது. நிறைவு விழாவில் மாணவ–மாணவிகள் சான்றிதழ்கள்

வழங்கப்பட்டன.

ஊட்டியில், வெயிலின் தாக்கம் காரணமாக

# எலுமிச்சை விலை அதிகரிப்பு

ஊட்டி, மார்ச்.28-

ஊட்டியில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதாலும், கோவில் திருவிழாக்கள் நடை பெற்று வருவதாலும் எலுமிச்சை பழத்தின் விலை அதிகரித்து வருகிறது.

### எலுமிச்சை பழம்

நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு தேவை யான பொருட்கள் பெரும் பாலும் சமவெளி பகுதிகளில் இருந்து தான் வருகிறது. இதில் குறிப்பாக உடல் சூட்டை தணிக்க உதவும் எலுமிச்சை பழங்களும் சமவெளி யில் இருந்து தான் வருகின் றன.



கடந்த சில நாட் களாக ஊட்டியில் பகல்வேளையில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் காடுகள் வறண்டு காணப்படுகின்றன. மேலும் நீர் நிலைகளில் தண்ணீரின் அளவு குறைந்து வருகிறது. வெயிலின் தாக்கம் காரணமாக ஊட்டியில் சமவெளி பகுதிகளை போன்று பகல்வேளையில் சொர்ட்டர் போன்ற வெம்மை ஆடைகளை அணிய முடிவது இல்லை.

### கிராக்கி அதிகரிப்பு

அதே நேரத்தில் வெயிலினால் தண்ணீர் தாகம் அதிகம் எடுக்கிறது. இதனால் மக்கள் ஜூஸ் கடைகளை நோக்கி செல்கிறார்கள். அங்கு குறைவாக விலைக்கு விற்கப் படும் எலுமிச்சை பழ ஜூஸை வாங்கி அருந்துகிறார்கள். உடல் சூட்டை தணிக்கும் என்பதால் எலுமிச்சை பழத் துக்கு கிராக்கி அதிகரித்துள் ளது. தற்போது எலுமிச்சை பழம் வரத்து குறைவாக உள்ளது. இதனால் பழத்தின் விலையும் அதிகரித்துள்ளது. மேலும் ஊட்டி மாரியம்மன் கோவில் உள்பட கோவில்களில் திருவிழா நடைபெற்று வருகிறது. கோவில் விழாக் களில் எலுமிச்சை பழம் பெருமள வில் பயன் படுத்தப்படுகிறது. இதன் காரணமாக வும் எலுமிச்சை பழத்தின் தேவை அதிகரித்து வருகிறது. தேவைக்கு ஏற்ப வரத்து இல்லாததால் விலை அதிகரித்துள் ளது.

### ரூ.7க்கு விற்பனை

ஊட்டி மார்க்கெட்டில் ரூ.5க்கு விற்பனை செய்யப் பட்ட ஒரு எலுமிச்சை பழம் தற்போது ரூ.7க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் தரம் பிரித்து ரூ.4, ரூ.5, ரூ.7 என எலுமிச்சை பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இது தொடர்பாக ஊட்டி மார்க்கெட் வியாபாரி ராஜா என்பவர் கூறும் போது, தற்போது எலுமிச்சை பழத்தின் வரத்து குறைவாக உள்ளது. இதனால் விலை அதிகரிக்க தொடங்கி உள்ளது. இதனால் ஒரு எலுமிச்சை பழம் ரூ.7 வரை விற்பனை செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.